**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC No.2015/2024**

**Prosecution witness : ம.சா.1** **Date : 10.02.2026.**

| | |
|---|---|
| **Name : சிவலிங்கம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் ரகசிய தகவலின் அடிப்படையில் நான் சென்றேன். என் மேலதிகாரி மாவட்ட நியமன அலுவலர் உத்தரவின் பேரில் தான் சென்றேன் என்றால் ஆமாம். எனக்கு எந்த பகுதியில் வேலை பணியானை வழங்கப்பட்டது என்றால் சேலம் மாநகராட்சி மண்டலம் 1 ல் வேலை செய்தேன். மேச்சேரி பகுதியில் கூடுதல் பொறுப்பில் வேலை செய்தேன்.

2) எந்த தேதியில் எனக்கு பணியாணை வழங்கப்பட்டது என்றால் மேச்சேரி யூனியன் பிளாக்கிற்கு வழங்கப்பட்டது என்றால் 2021ம் வருடம் வழங்கப்பட்டது தேதி நினைவில்லை. டிரைவர் போட்டுக் கொண்டு காரில் சென்றேன். டாடா இன்டிகோ வாடகை காரில் சென்றேன். அந்த ஓட்டுநர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ஓட்டுநரை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். குறிப்பாக எந்த இடத்திற்கு சென்றேன் என்றால் காமனேரி பஸ் ஸ்டாப்பிற்கு சென்றேன்.

3) அப்போது என்ன மணியிருக்கும் என்றால் இரவு 10.45 மணியிருக்கும். அப்போது யார் யார் இருந்தோம் என்றால் நானும் ஓட்டுநரும் இருந்தோம். என் அருகில் பொது மக்கள் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. போலீசாரை அழைத்து செல்லவில்லை. எத்தனை வண்டியை பிடித்தேன் என்றால் அதற்கு முன்பு எந்த வண்டியையும் பிடிக்கவில்லை.

4) எனக்கு வண்டியின் பதிவெண் ரகசியமாக தெரிந்ததால் சரியாக TN 52 T 7632 வண்டியை நிறுத்தினேன். நான் அரங்கனூரில் வண்டியை நிறுத்தினேன். அந்த வாகனம் காமனேரியிலிருந்து சின்ன திருப்பதி சென்றது என்றால் ஆமாம். அந்த வாகனத்தை கையை காட்டி நிறுத்தினோம் என்றால் இல்லை. பிறகு அரங்கனூர் சென்று கைகாட்டி நிறுத்தினோம். அரங்கனூரில் எந்த இடத்தில் குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் ஒரு வீட்டிற்கு முன்பாக நிறுத்தினேன்.

5) எத்தனை வீடுகள் இருந்தது என்றால் நிறைய வீடுகள் இருந்ததால் சரியாக சொல்ல முடியவில்லை. நாங்கள் லாரியை பிடிக்க காரில் சென்றோம். காமனேரியிலிருந்து எத்தனை கிலோமீட்டர் வேகத்தில் சென்று வாகனத்தை நிறுத்தினோம் என்றால் 5 கிலோமீட்டர் தொலைவில் சென்று லாரியை ஓவர் டேக் செய்து காரை குறுக்கே நிறுத்தினோம்.

6) ஓட்டுநர் இறங்கி ஓடினாரா என்றால் இல்லை. பதற்றம் அடைந்தார். லாரியை திறந்து பார்த்த போது தடை செய்யப்பட்ட குட்கா பொருள் இருந்தது. அதனை சேலம் மாவட்ட அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம். உணவு பொருள் வகையில் தான் குட்கா வருகிறது என்றால் ஆமாம்.

7) அலுவலகத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் எப்போதும் போல் சென்றேன். வாகனத்தை கைப்பற்றும் போது அங்கே பொது மக்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேனா என்றால் தினேஷ்குமார் என்பவர் வந்தார். தினேஷ்குமார் என்பவர் இரு சக்கர வாகனத்தில் வந்தார் அவருடன் மற்றொருவர் வந்தார், அவர் யார் என்று தெரியவில்லை. அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.,

8) தினேஷ்குமார் மேச்சேரி எறப்பரெட்டியூரை சேர்ந்தவர் என தெரிந்து கொண்டேன். படித்து முடித்து வேலை தேடுவதாக சொன்னார். அவரிடம் நான் சாட்சி கையொப்பம் கேட்டேன் என்றால் ஆமாம். குட்கா எத்தனை கிலோ இருந்தது என்று எங்கு வைத்து எடை போட்டேன் என்றால் மாவட்ட அலுவலகத்தின் அருகே உள்ள வேபிரிட்ஜில் சென்று எடை போட்டேன்.

அதற்குண்டான ரசீதை தாக்கல் செய்தேனா என்றால் மேட்டூரில் வேபிரிட்ஜை எடை போட்டு பில் வாங்கி சமர்பித்தேன்.

9) எடை போட்ட அந்த ஓனரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யதேனா என்றால் இல்லை. லாரி வாடகை வாகனம் என்றால் சரிதான். பறிமுதல் செய்யப்பட்ட பொருள், அந்த ஓட்டுநர் எங்கிருந்து எடுத்து வந்தார் எந்த ஏஜென்டிடம் வாங்கி வந்தார் என்றால் பெங்களூரில் இருந்து கொண்டு வந்ததாகவும் யாருக்கு என்று தெரியாது என்றும் சொன்னார்.

10) என்ன பொருளை ஏற்றினார் என்ற ஏஜென்டை தெரிந்து கொள்ளவில்லை. பெங்களூருக்கு நேரடியாக சென்று விசாரணை செய்யவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் லாரியின் ஓனரை சேர்த்துள்ளோம் என்றால் ஆமாம். டிரைவர் யார் சொல்லி ஏற்றினார் என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

11) லாரி ஓனர் ஏற்றி வர சொன்னதாக விசாரணையில் சொன்னாரா என்றால் இல்லை. என்னென்ன பொருட்களை கைப்பற்றினேன் என்றால் கணேஷ் 701 டொபோகா ப்ரீமியம், கூலிப் பில்டர் டொபோகா, சேப்ரான் பிளண்டன் விமல் பான்மசாலா, வி1 டொபோகோ ஆகியவை கைப்பற்றினோம். இந்த வழக்கில் கணேஷ் 701 டொபோகா ப்ரீமியம் ஆகியவற்றிற்காக வழக்கு போட்டுள்ளோம். STC No.2015 ல் கூலிப் பில்டர் டொபோகா, மற்றும் STC No.114 ல் சேப்ரான் பிளண்டன் விமல் பான்மசாலா, வி1 டொபோகோ போட்டுள்ளோம்.

12) எதற்காக தனித்தனியாக வழக்கு போட்டது தவறு என்றால் சரியல்ல. ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இந்த தடைசெய்யப்பட்ட பொருட்களை பிடித்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பெங்களூருக்கு சென்று அந்த கம்பெனியை வழக்கில் சேர்த்திருப்பேன் என்றும் பொய்யாக வழக்கு ஜோடித்ததால் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

13) என்ன காரணத்திற்காக கணேஷ் 701 டொபோகா ப்ரீமியம், கூலிப் பில்டர் டொபோகா, சேப்ரான் பிளண்டன் விமல் பான்மசாலா, வி1 டொபோகோ உரிமையாளர்களை சேர்க்கவில்லை என்றால் எனக்கு உணவு பாதுகாப்பு

ஆணையத்திடமிருந்து எதிரிகள் இருவர் மீது மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. மேற்சொன்ன பொருட்களுக்கு பில் உள்ளதா என்றால் இல்லை. பில் இல்லை என்பதால் கடத்தி வரப்பட்டது என்று சொல்ல முடியும் என்றால் வாங்கியதாக சொன்னார்கள். ஆனால் பில்லை பார்க்கவில்லை. இந்த வழக்கில் கணேஷ் கம்பெனி ஓனரை சேர்க்காமல் தாக்கல் செய்தது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

14) மூன்று வழக்கிலும் ஒரே லாரியை தான் சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் சரிவர விசாரிக்காமல் நானாகவே பொருட்களை தயாரித்து நானே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஓனருக்கும், டிரைவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்களை காவல் துறையினர் கைப்பற்றி வழக்கு போடுவார்கள் என்றால் ஆமாம். என்ன காரணத்திற்காக இந்த வழக்கை மட்டும் நான் பிடித்தேன் என்றால் குட்கா, பான்மசாலா, புகையிலை உணவு பாதுகாப்பு தடை செய்யப்பட்டுள்ளதால் நாங்கள் வழக்கு பதிவு செய்தோம்.

15) உணவு பாதுகாப்பு சட்டப்படி தான் இந்த பொருட்கள் தடை செய்யப்பட்டதால் நாங்கள் தான் தகுந்த விசாரணை அதிகாரி ஆவோம். அந்த லாரியில் தடை செய்யப்பட்ட பொருட்கள் இருப்பது குறித்து அறிந்த பின்னர் அதனை கைப்பற்றும் போது அந்த பகுதியில் மூன்றாம் தரப்பினர் முன்னிலையில் கைப்பற்றினேனா என்றால் தினேஷ்குமார் என்பவர் முன்பாக கைப்பற்றினோம். தினேஷ்குமார் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றால் இல்லை. தினேஷ்குமாரை விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்க தயாராக உள்ளோம். தினேஷ்குமார் தவிர மற்ற நபர்களை விசாரித்து கையொப்பம் பெற்றோமா என்றால் இல்லை.

16) ஓனர் மீது எதற்காக வழக்கு போட்டேன் என்றால் ஓட்டுநரும் ஓனரும் அண்ணன் தம்பி ஆவார்கள். அண்ணன் தம்பியாக இருந்தாலும் கூட டிரைவர் செய்வது ஓனருக்கு தெரியாது என்றால் சரியல்ல. எங்கு இறக்க வேண்டுமென்று டிரைவருக்கும் தெரியாது என்றால் ஆமாம். இறக்கிய இடத்தை

தெரிந்து கொண்டு அதை வாங்கும் நபர்களையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டுமென்றால் தேவையில்லை. எங்கிருந்து கடத்தப்பட்டது என்று விசாரித்திருப்பேன் என்றும் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எதிரி வாகனத்தை ஓட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.